


**Population:**
146,800 (2000)
180,800 (2010)
222,700 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** 20

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Made, Labrang, Amdo, Rongmahbrogpa

**மக்கள்தொகை:** 1,12,800 (1987, Language Atlas of China)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, போதி, போதிஷ், வடக்கு திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 2

**புத்த மதத்தினர்:** 99%

**கிறிஸ்துவம்:** 0.1%

**வேதாகமம்:** சில பகுதிகள் கி.பி. 1862, புதிய ஏற்பாடு கி.பி. 1885, திபெத்திய பைபிள் கி.பி. 1948

**இயேசு திரைப்படம்:** உண்டு

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** ADX03

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்

**வசிப்பிடம் :** கி.பி. 1987 ன் சீன மொழி ஆய்வு 1,12,800 ரொங்மாருக்பா அம்தோ மொழி பேசும் மக்கள் உள்ளதாக அட்டவணையில் காட்டியது. இவர்களுடைய வசிப்பிடத்தின் மையப்பகுதி தென்மேற்கிலுள்ள கன்சு (Gansu) மாநிலத்தின் கண்ணைக்கவரும் ஷ்யாஹ(Xiahe) பட்டணமாகும். இந்த மொழி அருகாமையிலுள்ள சிங்ஹாய் (Qinghai) மாநிலத்தின் தங்ரென் (Tongren) மாவட்டத்திலும் பேசப்படுகிறது.

**அடையாளம்:** இனத்திலும் கலாச்சாரத்திலும் ரொங்மாருக்பா அம்தோக்கள் திபெத்தியர்களாக இருந்தாலும்கூட இவர்கள் மற்றத் திபெத்திய மொழிகளிலிருந்து வேறுபட்ட மொழியைப் பேசுகின்றனர். ரொங்மாருக்பா என்ற திபெத்திய வார்த்தை ரொங்பா (கிராமவாசி அல்லது விவசாயி ) மற்றும் ருக்பா (நாடோடி அல்லது மேய்ப்பன் ) என்ற வார்த்தைகளின் கூட்டாகும்.

**மொழி:** ரொங்மாருக்பா இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வட்டார மொழி வழக்குகளை உடையது. இது மேற்கத்திய போதிஷ் (Bodish) மொழிப் பிரிவின் கிளையான திபெத்திய மொழியைச் சேர்ந்ததாகும். திபெத்தியர்கள் ஒருவருடைய மொழியை மற்றொருவர் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் எல்லா திபெத்தியர்களும் ஒரே எழுத்தைப் பயன்படுத்துகின்றனர். வெவ்வேறு பகுதியைச் சேர்ந்தத் திபெத்தியர்கள் தொடர்புகொள்ள, எழுதிய சீட்டைப் பரிமாற்றிக்கொள்வதை அடிக்கடி காணமுடியும்.

**வரலாறு:** ஷ்யாஹவில் உள்ள லப்ரங் (Labrang) புத்த மடம் கி.பி. 1709 ல் ஙவாங் சொன்று (Ngawang Tsondru) மூலமாகக் கட்டப்பட்டது. இந்நாள்களில் சிங்ஹாய், கன்சு மற்றும் மங்கோலியாவிலிருந்து வந்த 1700 புத்தத் துறவிகள் இங்கு வசிக்கின்றனர். முந்தைய நாள்களில் அம்தோக்கள் மற்றும் ஹுய் முகமதியர்களிடையே அநேகக் கொடூரமான யுத்தங்கள் நடந்துள்ளன. கி.பி.1919 ல் ஹுய்க்கள் லப்ரங் மடத்தை அழித்து நூற்றுக்கணக்கான புத்தத் துறவிகளை எரித்துக் கொன்று மட மைதானத்தில் புதைத்தனர். கி.பி.1929 ல் ஆய்வாளர் ஜோசப் ராக் ஒரு யுத்தத்தின் விளைவை ஷ்யாஹவில் கண்டார்: “154 திபெத்தியர்களின் தலைகள் வெட்டப்பட்டு முகமதியர்களின் பாளையத்தின் சுவர்களில் மாலைபோலத் தொங்கவிடப்பட்டிருந்தது. இளம் பெண்கள் மற்றும் குழந்தைகளுடைய தலைகள் பாளையத்தின் முன்பாக அலங்காரமாகத் தூண்களில் வைக்கப்பட்டிருந்தன. முகமதியர்கள் குதிரைச் சேணங்களில் 10 அல்லது 15 மனிதத் தலைகளைத் தொங்கவிட்டு சவாரி செய்தார்கள்.”

**மதம்:** வெளிப்புறமாக அம்தோக்கள் திபெத்திய புத்த மதத்தினர் ஆவார்கள் ஆனால் இந்நாள்களில் பழமையான பொன் (Bon) மதம் வளர்ச்சி அடைந்துள்ளது. பொன் மதம் ஆவிகளோடு தொடர்புகொள்ளும் சூனியக் குருக்களோடு தொடர்புடையது. பலிசெலுத்துவது, ஆவிகளை சினந்தணியச் செய்ய மந்திரம் செய்வது, வியாதியஸ்தர்களை சுகமாக்குவது இவர்களுடைய வேலையாகும். சில விசேஷித்த அனுபவமுடைய சூனியக் குருக்கள் நினைவிழந்த நிலையில் ஆவி உலகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுப் பேய்கள் தங்களை வெளிப்படுத்த மத்தியஸ்தர்களாக இருக்கிறார்கள். இந்தச் சூனியக் குருக்களோடு சேர்த்து, மந்திரவாதி மற்றும் நோய்களைக் குணமாக்குவோரும் உண்டு, இவர்கள் தெய்வங்கள், பூதங்கள் மற்றும் உள்ளூர் ஆவிகளைக் கட்டுப்படுத்தச் சக்தி உடையவர்கள்.




**கிறிஸ்துவம்:** தி கிறிஸ்டியன் அண்ட் மிஷனெரி அலையன்ஸ் (The Christian and Missionary Alliance) கி.பி 1920 ல் ஷ்யாஹவில் ஒரு பணித்தளத்தை ஆரம்பித்தது. புத்தமதத்தின் கோட்டையின் மத்தியில் அவர்கள் குறைவான முன்னேற்றத்தையே காணமுடிந்தது. ஒருவர் இவ்வாறு எழுதினார் “கடினமான காரியமாக எனக்குத் தோன்றுவது : உணவுப்பழக்கம். திபெத்தியர்களுடைய உணவு உட்கொள்ள மிகவும் கடினமானது, ஜீரணிப்பதற்கு இன்னும் கடினமானது, இருந்தும் இந்த மாவட்டத்தில் சுற்றித்திரியும் மிஷனெரி இதை உட்கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் அவர் தன்னை உபசரிப்பவரை மிகவும் அவமதிக்கிறார், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அவருக்கு வாய்ப்பு கிடைக்காது.” இயேசு திரைப்படம் கி.பி.1998 ல் அம்தோ மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.